Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15 Date of Publication 25th of Every Month



**பெண்கள் உபவாச கூட்டம்**

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில்
காலை 10 முதல் 12 மணி வரை
சகோதரிகள் கலந்து கொள்ளுங்கள்.



+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881

www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஏக்காளம்

Vol. 7
Issue. 4

தனிப்பிரதி ரூ20/=
ஜனவரி 2014



# சமாதானம் 2014




தேவன், ஆதாம், ஏவாளை தம்மோடுகூட நல்ல உறவு வைத்திருப்பதற்காகவே உண்டாக்கினார். அவர்கள் இருவரும் தம்மோடு ஐக்கியமாக இருக்க விரும்பினார். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை பார்க்கிறோம். ஆதாம், ஏவாள் இருந்த தோட்டத்திலே தேவன் உலாவினார். அவர்களோடுகூட பேசினார். நம் ஒவ்வொருவருடன்கூட இப்படியாக பேச விரும்புகிறார். நம்மோடு ஐக்கியமாய் இருக்க விரும்புகிறார். நாம் அவரை நேசித்து, வாஞ்சையோடுகூட தேட அவர் ஆவலாயிருக்கிறார். தேவன் புசிக்கக் கூடாது என்று சொன்ன கனியை அவர்கள் புசித்ததால் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், தேவனை விட்டு வழி விலகிப் போனார்கள். தேவன் எப்பொழுதும்போல தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். ஆதாமும், ஏவாளும் அவர் சத்தத்தைக் கேட்டு, அவருக்கு கீழ்ப்படியாததால் பயந்து தோட்டத்திலுள்ள மரங்களுக்கிடையில் தங்களை மறைத்துக் கொண்டார்கள் (ஆதியாகமம் 3:8).

பாவம் தேவனைவிட்டு அவர்களைப் பிரித்தது. தேவன் அவர்களை அதிகமாக நேசித்தார். அதனால் அவர்களை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். அவர்களுக்கென்று ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி, அவர்களை அதிலே வைத்தார். ஆனால் அவர்களோ தேவனை நேசிக்காமல், அவருக்கு கீழ்ப்படியாமல் பிசாசுக்கு கீழ்ப்படிந்தார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் நாம் அநேக வேளையில் தேவன் நம்மை நேசிப்பதை மறந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல், பிசாசுக்கு கீழ்ப்படிந்து, தேவனை வேதனைப்படுத்தி அவரைப் புறக்கணிக்கிறவர்களாக இருக்கிறோம்.

அந்தக் கனி பார்ப்பதற்கு அழகாயும், உண்பதற்கு ஏற்றதாயும், தன் புத்தியை தெளிவிக்கிறதுமாய் இருப்பதை ஏவாள் அறிந்தாள். தன் மாம்சம் விரும்பியதை புசித்தாள் (மாம்சத்தின் இச்சை) தன்னை அறிவாளியாக்கும் என்பதை எண்ணி பரவசமடைந்தாள். முதலில் பாவம் கண்களின் இச்சையினால் வந்தது. பாவம் நம்மை மகிழ்விப்பதாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும். சர்ப்பம் ஏவாளிடம் இந்த கனியை புசித்தால், கண்கள் திறக்கப்பட்டு நன்மை தீமையை அறிந்து தேவனைப் போலாவீர்கள் என்று சொன்னது. ஏவாள் சாத்தான் சொன்ன பொய்யை நம்பி ஏமாற்றப்பட்டாள். பாவத்தில் விழுந்தாள். தனிப்பட்ட வாழ்க்கையில் கர்த்தரோடு அவர்களுக்கிருந்த நெருங்கிய உறவு உடைந்து



போனது.

இன்றைக்கும் பிசாசு பலவிதமான பாவங்களில் மனிதனை விழவைத்து தேவனிடமிருந்து பிரித்து விடுகிறான். அதனால் மனிதன் கர்த்தரிடமிருந்து வரும் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் இழந்து போகிறான். பொருட்களின்மீது, பணத்தின்மீது, மனிதர்கள்மீது, கவர்ச்சியைக் காட்டி, ஆசையைத்தூண்டி பாவத்தில் விழவைக்கிறான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10). இரட்சிக்கப்பட்டவர்கள், தொடர்ந்து வேதத்தை தியானித்து, கர்த்தரோடு நெருங்கி வாழும்போது, சந்தோஷமான, சமாதானமுள்ள வாழ்க்கையை வாழலாம்.

நம்மை தேவனிடத்தில் நெருங்க விடாமல் பாவத்தில் விழ வைப்பதே பிசாசினுடைய நோக்கமாகும். நம்மை பாவத்தில் விழ வைத்து, நிம்மதியை, சுகத்தை கெடுக்கிறான். பாவம் செய்யும்போது குற்ற மனசாட்சியோடு கூட வாழுகிறோம். நாம் எந்த காரியத்தில் பலவீனமாயிருக்கிறோமோ, அந்த பாவத்திலே பிசாசு நம்மை விழ வைப்பான். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8). நாம் பிசாசுக்கு இடங்கொடுக்கும்போதுதான் பாவத்தில் விழுந்து விடுகிறோம். தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7). பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் (எபேசியர் 4:27). அநேகர் இணைய தளத்தில் சென்று பார்க்கக்கூடாத அருவருப்பான காட்சிகளை துணிகரமாக பார்க்கிறார்கள். இச்சையைத் தூண்டும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு தெய்வ பயமில்லாமல் வாழ்கிறார்கள். கர்த்தர் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்கிற உணர்வில்லாமல் தொடர்ந்து ஆபாசக் காட்சிகளை வழக்கமாக பார்க்கிறார்கள். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது (மத்தேயு 5:28). அநேகர் இப்படியாக விபச்சாரம் என்னும் பாவத்தில் விழுந்து தங்களை கறைப்படுத்திக்கொண்டு பிசாசின் பிடியில், அவனுடைய கோட்டைக்குள் இருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு எதிராக செயல்படுகிறார்கள். விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது (உபாகமம் 5:18). வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போகும்போது சாபம் வருகிறது. மறைவான பாவங்களில் ஈடுபடுவதினால்தான் தேவனால் அவர்களை ஆசீர்வதிக்க முடியவில்லை. வார்த்தைதான் இயேசு. இயேசுதான் வார்த்தை (1 யோவான் 1:1). பாவம் செய்யும்போது வார்த்தையாகிய இயேசுவுக்கு எதிர்த்து செயல்படுகிறோம். யோபு, விபச்சாரம் என்னும் பாவத்தில் விழாதபடி தன்னைக் காத்துக் கொண்டான். அவன் கண்களினால் பாவம் செய்யவில்லை. என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? (யோபு 31:1). யோபுவிடம் எந்தவிதமான கெட்ட சிந்தனைகளும் இல்லாதிருந்தது. தன் கண்களினால் பாவம் செய்ய அவன் இடங்கொடுக்கவில்லை. இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும் (மத்தேயு 15:19). உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப்

பிடிக்கவிடாதே (நீதிமொழிகள் 6:25). இச்சையோடு பார்ப்பது ஆபத்துக்கு நேராய் கொண்டுபோய் விடுகிறது. எதிர்பாலர்களால் கவர்ந்து இழுக்கப்பட்டு, அவர்களைக்குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தீர்களானால், எச்சரிக்கையோடு இருங்கள். உங்களது விருப்பமே உங்களை பாவம் செய்ய வைத்துவிடும்.

அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது, கர்ப்பந்தரித்து, பாவத்தை பிறப்பிக்கும். பாவம் மரணத்தை பிறப்பிக்கும் (யாக்கோபு 1:14,15). பாவ சோதனைகள் வரும்போது, கர்த்தரை நோக்கிப்பார்த்து, அவருடைய பெலனைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது பாவத்தில் விழுந்து விடாமல் தடுத்துவிடலாம். பாவத்தை மேற்கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க தீர்மானிக்க வேண்டும்.

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள் (யாக்கோபு 4:8). நாம் தேவனைக் கிட்டிச் சேரும்போது, அவரும் நம்மண்டை நெருங்கி வருவார். நாம் அவரை விட்டு விலகும்போது, பிசாசு எளிதாக நமக்குள் வந்து நம் சிந்தையில் கிரியை செய்கிறான். நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டுவிட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டு விலகுவார் (2 நாளாகமம் 15:2). நாம் தனியாக இருக்கும்போது, பிசாசு எளிதாக பாவத்தில் விழவைக்கிறான். ஆகிலும் சர்ப்பம், ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி, கெடுக்கப்படுவோமென்று பயந்திருக்கிறேன் (2 கொரிந்தியர் 11:3). ஏவாள் சர்ப்பத்தின் பேச்சைக் கேட்டதினால், தேவன் மீதிருந்த கவனத்தை இழந்தாள். நம்முடைய வாழ்க்கையிலும் தேவன்மேல் நாம் வைத்திருக்கிற கவனத்தை திருப்ப பலவிதங்களில் சாத்தான் முயற்சிப்பான்.

நாம் கர்த்தரோடு நெருங்கி வாழ வேண்டுமானால், கர்த்தருக்கென்று நம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். கர்த்தருக்கு முதலிடம் கொடுக்காமல், அவரை விட்டு வழிவிலகச் செய்யும் காரியங்கள் நம்மிடம் இருந்தால் இன்றே மனந்திரும்பி, கர்த்தரோடு ஐக்கியமாய் இருப்போம். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களாய் அவருடைய சித்தத்தை செய்கிறவர்களாய், அவருடைய முழுமையான ஆளுகைக்குள்ளாய் இருந்து, மகிழ்ச்சியோடு அவரைப் பின்பற்ற வேண்டும். சாத்தான் கவர்ச்சியைக்காட்டி பாவச் செயலை செய்யத் தூண்டும்போது, அவனுக்கு இடங்கொடுக்கக்கூடாது. பரிசுத்த இருதயத்தோடு இருக்க வேண்டும்.

தாவீது போருக்குச் செல்லாமல், உப்பரிக்கையில் உலாவிக் கொண்டிருக்கும்போது, தன் கண்களின் இச்சையினால், பாவத்தில் விழுந்தான். பின் தான் செய்த பாவத்தை ஒத்துக்கொண்டு, அதை தேவனிடம் அறிக்கை செய்து மன்னிப்பு கேட்டான். மனந்திரும்பினான். பின் அந்த பாவத்தில் மறுபடியும் விழவில்லை. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதிமொழிகள் 28:13). தாவீது கர்த்தரை நோக்கி இப்படியாக ஜெபிக்கிறான்: தேவனே சுத்த இருதயத்தை என்னிலே



சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் (சங்கீதம் 51:10). நாம் இரட்சிக்கப்பட்டபின் தொடர்ந்து பரிசுத்தமாய் வாழ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் பரிசுத்தமாய் வாழ, நம் வாழ்விலிருந்து பாவத்தை அகற்ற வேண்டும் . தாவீது தான் செய்த பாவத்தை ஒத்துக் கொண்டான். நாமும் பாவிகள் என்பதை ஒத்துக்கொண்டு பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களை கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்துகிறது. நாம் தேவனையும், உலகத்தையும் ஒரே நேரத்தில் பின்பற்ற முடியாது. நம்முடைய சிந்தனைகளை எப்பொழுதும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருக்கிற சிந்தையே உங்களில் இருக்கக்கடவது.

நாம் கர்த்தரைக் கிட்டிச் சேரும்போது தான், தவறு செய்தமைக்காக வருந்துகிறோம். நம்மை உண்மையாய் நேசித்த கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்து அவரை வேதனைப்படுத்திவிட்டோமே என்று துயரப்படுகிறோம். தேவனுக்கு விசுவாசமில்லாமல் இருந்துவிட்டோமே என்று அழுவோம். மோசமான பாவத்தை செய்ததற்காக மனதின் ஆழத்திலிருந்து வருந்துவோம். இருதயத்தை கடினப்படுத்தமாட்டோம்.

### ஏனோக்கு

ஏனோக்கு தேவனோட சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமல் போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார் (ஆதியாகமம் 5:24). ஏனோக்கு தேவனோடுகூட நடந்தான். கர்த்தரை நேசித்து, அவரோடு நெருங்கிய உறவு வைத்திருந்தான். அதிக நேரத்தை தேவனோடு செலவழித்தான். ஏனோக்குக்கு குடும்பம் இருந்தது. அவன்



தேவனோடே முன்னூறு வருடம் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அக்காலத்தில் அவன் குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

ஏனோக்கு தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்தான். தேவன்மேல் உள்ள விசுவாசத்தினால் அவன் மரணமடையாமல் பரலோகத்திற்கு உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார். அதன்பின் ஜனங்கள் அவனை காண முடியவில்லை. விசுவாசத்திலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற் போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான் (எபிரெயர் 11:6). உண்மையாய் தேவனைத் தேடும் அனைவருக்கும், அவர் பலனளிக்கிறவராயிருக்கிறார். நாமும் தேவனுடன் நெருக்கமாக தனிப்பட்ட முறையில் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும். அவரை முழுமையாக விசுவாசித்து அவருக்கு பிரியமான

வர்களாக மாறவேண்டும். இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், இன்னும் கர்த்தரோடு ஐக்கியமாய் நெருங்கி வாழவேண்டும்.

ஆதாமுக்கு ஏழாந் தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ எல்லோருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தை களெல்லாவற்றினிமித்தமும், அவர்களை கண்டிக்கிறதற்கும் ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுக்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான் (யூதா 14,15). ஏனோக்கு தன்னை சுற்றியிருந்த ஜனங்களுக்கு தீர்க்கதரிசனம் சொன்னான். ஜனங்களின் பாவங்களை கண்டித்து உணர்த்தினான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து தான் வாழ்ந்த காலகட்டத்திலேயே தீர்க்கதரிசனம் உரைத்தான். ஒவ்வொருவர் செய்த பாவங்களுக்கும் கர்த்தருடைய நியாயந்தீர்ப்பு உண்டு. அவனவன் கிரியைக்கேற்ற பலனை அளிக்கிற தேவன், அநீதியாய் நடந்தவர்களுக்கும், நியாயந்தீர்ப்பு செய்கிறவர்களுக்கும், அநியாயம் செய்தவர்களுக்கும், தேவனுக்கு எதிர்த்து நின்று அவருக்கு எதிராக கடினமான வார்த்தைகளை பேசினவர்களுக்கும் நிச்சயம் தண்டனை உண்டு. எல்லா மக்களையும், நியாயந்தீர்ப்பதற்காகவும், தேவபக்தியில்லாத ஜனங்களின் செயல்களையும், வழிகளையும், பேசின வன்சொற்களையும் நியாயந்தீர்க்க கர்த்தர் தம்முடைய தூதர்களோடு கூட வருகிறார் என்று கூறினான்.

நாமும் தேவனோடுகூட நடக்க தேவன் வாஞ்சிக்கிறார். தினமும் வேதத்தை படிப்போம், வேதத்தை தியானிப்போம், ஜெபிப்போம். தேவ சமூகத்தில் காத்திருப்போம். தேவனுக்கு பிரியமாய் அவருக்கு உகந்த வாழ்க்கையை வாழ்வோம். ஏனோக்கு குடும்பமாய் வாழ்ந்தபோதும் தேவனோடுகூட நடந்தான். தேவனோடு பேசினான். தேவன் அவனோடுகூட பேசினார். இருவரும் கூடிக்கலந்து பேசினார்கள். தங்கள் எண்ணங்களை, உணர்வுகளை பகிர்ந்து கொண்டார்கள். வேத வார்த்தையின்படி நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போம். கர்த்தருடைய ஊழியத்தை செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போம். அநேகரை கர்த்தரண்டை வழிநடத்துவோம். பாவத்தில் வாழ்கிறவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம். ஏனோக்கைப்போல கர்த்தரோடுகூட நடக்கவும் கர்த்தர் நம்மை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும், வரங்களினால் நிரப்பும்படியாகவும் ஜெபிப்போம்.

## நோவா

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்; (ஆதியாகமம் 6:9). நோவா தேவனை நேசித்தான். தேவனோடுகூட நடந்தான். தேவபக்தியுள்ளவனாய், நீதியுள்ளவனாய், உத்தமனாய் இருந்தான். தெய்வபயமில்லாத ஜனங்களின் மத்தியில், தேவனைப் பின்பற்றி, அவருக்கு கீழ்ப்படிந்து, தேவனை விசுவாசித்து வாழ்ந்தான்.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது (ஆதியாகமம் 6:5,6,).



நோவா கர்த்தருக்கு பிரியமான வழியில் நடந்தான். அவரைப் பின்பற்றி வாழ்ந்தான். மற்ற மனிதர்கள் அனைவரும் பெரும்பாவிகளாக, பாவ எண்ணங்களையுடையவர்களாய், மோசமான நடத்தையுடையவர்களாய் மாறியிருந்தார்கள். அவர்கள் பூமியில் தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். தேவன் வெறுக்கும் அருவருப்பான காரியங்களைச் செய்தனர். பூமி முழுவதும் வன்முறையினால் நிறைந்திருந்தது. ஜனங்கள் தேவனுடைய இருதயத்தை துக்கப்படுத்தி, அவரை அவமதித்தனர். விதிமுறை, ஒப்பந்தம், சட்டம் முதலியவற்றை மீறி நடந்து அவற்றிற்கு எதிராக செயல்பட்டனர். பிறருடைய உரிமைகள், சுதந்திரம், முதலியவற்றை குறைத்தனர். அவற்றை அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து குறுக்கீடு செய்தனர். பிறர் மனது கொந்தளிக்கும் வகையில் அட்டூழியம் செய்தனர். இரக்கமில்லாதவர்களாய் எதிர்பாராத விதத்தில் பிறரைத் தாக்குகிறவர்களாய், இச்சையுள்ளவர்களாய் ஒழுக்கக்கேடான நேர்மையற்ற வழியில் சென்று கொண்டிருந்தனர். அதனால் கர்த்தர் நோவாவிடம் எல்லா மனிதர்களையும் வெள்ளத்தினால் அழிப்பேன் என்று கூறினார். நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்ற ஒரு பேழையை உண்டாக்கும்படி சொன்னார்.

நோவா கர்த்தரை முழுமையாக நேசித்தான். கர்த்தரோடுகூட எப்பொழுதும் பேசிக்கொண்டேயிருந்தான். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, பொறுமையோடு பேழையை செய்தான். கர்த்தர் தன்னிடம் சொன்ன யாவையும் நடக்கும் என்று விசுவாசித்தான். கர்த்தரை நேசித்து, அவருடைய வழியில் நடந்ததால் கர்த்தருடைய கண்களில் அவனுக்கு கிருபை கிடைத்தது. கர்த்தர் நோவாவையும் அவன் குடும்பத்தையும்



தவிர மற்ற எல்லா ஜனங்களையும் வெள்ளத்தினால் அழித்தார். ஜனங்கள் கர்த்தரோடு ஐக்கியம் கொள்ள விரும்பாமல் பாவத்தில் வாழ்ந்து அழிந்து போனார்கள். பாவத்தின் சம்பளம் மரணம்.

பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி (2 பேதுரு 2:5). நோவா சரியான வழியில் வாழ்வது பற்றி, ஜனங்களுக்கு போதித்தான். ஜனங்கள் தங்கள் மனம்போன போக்கில், தங்களுக்கு பிரியமான வழியில் வாழ்ந்தார்கள். கர்த்தர் பூமியை வெள்ளத்தால் அழிக்கப்போகிறார் என்றும், பாவத்திலிருந்து மனந்திரும்பும்படி நோவா ஜனங்களை எச்சரித்தான். ஜனங்களோ அவன் வார்த்தைக்கு செவிகொடாமல், கீழ்ப்படியாமல், தெய்வபயமில்லாமல் இருந்தார்கள். தேவனிடமிருந்து வந்த வார்த்தையை விசுவாசியாமல் அசட்டை பண்ணினார்கள்.

மழை பெய்யும், வெள்ளப்பெருக்கு

வரும் என்று தேவன் சொன்னதை, நோவா அப்படியே விசுவாசித்தான். தேவ செய்தியை விசுவாசிக்காமல், கீழ்ப்படியாமல் இருந்த ஜனங்கள்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று விசுவாசித்தான். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவை களைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். அதி னாலே அவன் உலகம் ஆக்கினைக் குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத் தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திர வாளியானான் (எபிரெயர் *11:7*). நோவா தேவனின் வார்த்தையை மதித்து, பேழையை உண்டாக்கினார். பேழையை செய்யும்போது, சுற்றியிருக்கும் ஜனங்கள் பரியாசஞ் செய்தார்கள். அதனால் அவனது மனது வேதனைப்படவில்லை, சோர்வடையவுமில்லை. நோவாவின் மூலமாக தேவன், ஜனங்களிடம் பேசியும் அவர்கள் தேவசெய்தியை விசுவாசி யாமல் அழிந்து போனார்கள். கர்த்த ருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசிகள் மூலமாக நமக்கு வரும் போது, தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

நாம் தேவனில் நிலைத்திராதபடிக்கு, பலவிதமான பிரச்சனைகளையும், போராட்டங்களையும், நெருக்கங்களையும், வியாதிகளையும், மாம்சீக இச்சைகளையும், மாம்சீக எண்ணங்களையும் கொண்டு வந்து, நம் வாழ்க்கையில் ஊழியத்தில் முன்னேற விடாதபடி பிசாசு தடைகளை கொண்டு வருவான். என்ன தடைகள் வந்தாலும், நாம் இனங்கண்டுகொண்டு தேவனோடு நெருங்கி வாழவேண்டும். சுயவழியில் செல்லாதபடி தேவனுடைய வழியை தெரிந்து கொண்டு அதில் செல்ல வேண்டும். மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள் (நீதிமொழிகள் *14:12*).

கர்த்தர் நம்மை ஆளுகை செய்ய விடாமல் நாமே நம்மை ஆளுகை செய்யும்போது, நமக்கு நாமே அழிவை உண்டாக்குகிறோம். தேவன் நம்மை ஒருபோதும் அவருடைய வழியில் செல்லும்படி நம்மை வற்புறுத்தமாட்டார். நாமாகவே அவரைத் தேடுகிறோமா? அவரண்டை வருகிறோமா? வேதத்தை வாசிக்கிறோமா? வேதவார்த்தையை வாசிக்கிறவர்களாக மட்டுமல்ல அதன்படி நடக்கிறவர்களாக இருக்கிறோமா? என்று பார்க்கிறார். அவரோடு நாம் தொடர்பு கொள்ள வாஞ்சிக்கிறார். நோவா பாவமும் அக்கிரமமும் நிறைந்த உலகத்திலே வாழ்ந்தபோதிலும், கர்த்தரை நேசித்து, அவரோடுகூட நடந்தான். கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருந்தான். எல்லாவற்றிற்கும் கர்த்தரையே நோக்கிப் பார்த்தான். அதனால் கர்த்தருடைய கிருபை அவன்மேல் வந்தது.

நாம் கர்த்தரை பின்பற்றாமல் , அவரை விட்டு விலகி மனிதர்களையும் உலகத்தையும் நோக்கிப் பார்த்தால், கர்த்தருடைய கிருபையை இழந்து போகிறோம். அநேகர் பாவத்தில் விழுந்து கிருபையை இழந்து போகிறார்கள். தேவன் அவர்களை வைத்து செய்யப் போகும் மகிமையான காரியங்களை இழந்துபோய் பிசாசின் கண்ணியில் மாட்டி சிக்கிக் தவிக்கிறார்கள்.

பொய்யான மாயையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள் (யோனா *2:8*). கையினால் செய்யப்பட்ட விக்கிரகங்களை வணங்கும்போது, கர்த்தரிடமிருந்து வரும் கிருபையையும் இரக்கத்தையும் இழந்து போகிறோம். பயனில்லாத விக்கிரகங்களை வணங்கு பவர்களுக்கு அவைகள் உதவுவதில்லை. தேவனுடைய இடத்தில் மனிதர்



களையோ, பொருட்களையோ, பணத்தை, வேலையை, ஆஸ்திகளை வைப்பதும் விக்கிரகங்களை வணங்குவதற்கு சமம். விக்கிரகங்களை வணங்குகிறவர்களை பின்பற்றி, அவர்களுடைய வழியில் நாம் செல்லாமல், கர்த்தருடைய வழியில் செல்ல நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இஸ்ரவேல் ஜனங்கள் பொய்யான தெய்வத்தை வணங்கி, புறஜாதிகளின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தார் கள். கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்காமல், அவரைவிட்டு வழிவிலகிச் சென்றார்கள். பொல்லாத வழியில் நடந்தார்கள். செய்யத்தகாத காரியங்களை தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு எதிராக இரகசியமாக செய்தார்கள். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக பலமுறை எச்சரித்தும் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, கர்த்தருடைய எச்சரிக் கையை கவனிக்க மறுத்தனர். அதனால் கர்த்தர் அவர்களை எதிரிகளின் கையில் ஒப்புக் கொடுத்தார் (*2* இராஜாக்கள் *17:7-23*). அவர்கள் செய்த பாவங்களுக் கேற்ற தண்டனையை அனுபவிக்கும்படி கர்த்தர் அவர்களை விட்டுவிட்டார். அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும், தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான் (நீதிமொழிகள் *29:1*).

இஸ்ரவேல் ஜனங்கள் மோசமான சீர்கெட்ட பாவங்களை இரகசியமாக முழுஈடுபாட்டோடு செய்தனர். அதற்கு பெருமளவு நேரத்தையும், கவனத்தையும் செலுத்தினார்கள். இன்றைக்கும் அநேகர் தெய்வபயமில்லாமல், கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்கிற உணர்வில் லாமல் இரகசிய பாவத்தைச் செய்கிறார்கள். யாரும் அறியாத இரகசிய பாவங்களை தேவன் அறிந்திருக்கிறார். தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. இரகசிய பாவத்தில் இருப்பவர்கள் தேவனுக்கு அடங்காதவர்கள். தேவனை எதிர்த்து போராட்டம் செய்பவர்கள். தேவனுடைய ராஜ்யத்தை சேதப்படுத்தி, அவருடைய சட்ட, திட்டங்களுக்கு பணிய மறுப்பவர்கள். இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை. வார்த்தையின்படி நடப்ப தினால் வரும் பலன்களையும், நன்மைகளையும், மனநிறைவையும் அறியாதிருப்பார்கள்.

கர்த்தருக்காக வாழ வேண்டும் என்கிற எண்ணமில்லாமல் சுயநல முள்ளவர்களாய் வாழ்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாய் அவர் சொல்லுகிறபடி வாழ்வேன் என்று நாம் தீர்மானம் எடுக்க வேண்டும். உங்க ளைச் சுற்றி இருப்பவர்கள் உங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதை விட்டுவிட்டு விடுவோம். கர்த்தர் உங்களைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதே முக்கியம்.

உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண் டானவைகளல்ல, அவைகள் உலகத்தி னாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (*1* யோவான் *2:15-17*). மனுஷனுடைய இருதயத் தின் உள்ளிருந்து உலக காரியங்கள் வெளிப்படுகிறது. இருதயத்தின் நினைவுகள் எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான். சுயநலமாக இருப்பது பாவம். சுயத்தை திருப்தி படுத்தும் பொருட்களை விரும்புவதும், பாவத்தைக் குறித்தே இடைவிடாது சிந்தித்துக்கொண்டு மாம்சம் விரும்புவதை நிறைவேற்றுவதும்

(மாம்சத்தின் இச்சை) பார்க்கிற பொருட்களை விரும்பி, அவற்றை அதிகமாக சேர்ப்பதும், வாழ்க்கையில் பணமும், உடமைகளுமே முதன்மையானவை என்று கருதுவதும், (கண்களின் இச்சை) தன்னிடம் உள்ளதைப் பற்றியும், அவர்கள் செய்வதையும் பற்றியும் வீண் பெருமை பேசுதல், (ஜீவனத்தின் பெருமை). இவைகள் உலகத்திலிருந்து வருபவை. நாம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறவர்களாக, ஈகை குணமுள்ளவர்களாக, தாழ்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவன் விரும்புவதைச் செய்பவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய ஆசை தேவன்மீது இருக்கிறதா? உலகத்தின்மீது இருக்கிறதா? நாம் எந்த அளவு தேவனோடு ஐக்கியமாய் இருக்கிறோம்?

**ஆபிரகாம்**

ஆபிரகாம் கர்த்தரை அதிகமாக நேசித்தான். ஒரு நண்பனைப்போல அவரோடுகூட உறவாடினான். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பிரியமாய் வாழ்ந்தான். ஆபிரகாமோடுகூட உள்ள உறவை உறுதிப்படுத்த கர்த்தர் அவனுடன் உடன்படிக்கை செய்தார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி : நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன்பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாத மாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களைச் ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதியாகமம் 12:1-3). ஆபிரகாமை கர்த்தர் அழைத்தவுடன் உடனே கீழ்ப்படிந்து, தான் போகிற இடம் தெரியாதபோதிலும் புறப்பட்டுச் சென்றான். கர்த்தர் ஆபிரகாமின் மூலமாக பெரிய தேசத்தை உருவாக்குவேன் என்று கூறினார். இந்த தேசத்திற்கு மட்டுமல்ல, மற்ற தேசங்களும் ஆபிரகாமின் மூலமாக ஆசீர்வதிக்கப்படும் என்றார். இஸ்ரவேல் தேசத்தார் ஆபிரகாமின் மூலமாக தேவனைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தனர். கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார் (சங்கீதம் 25:14). கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் கர்த்தரை அதிகமாக நேசித்து, அவரது அன்பையும், பரிசுத்தத்தையும், இரக்கத்தையும் அவரது குணநலன்களையும் அறிந்து கொண்டு, அவர் வெறுக்கும் தீய காரியங்களையும் வெறுத்து, பாவத்திற்கு விலகியிருப்பார்கள். கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து அவரைப் பற்றியிருப்பவர்களிடம் கர்த்தர் நெருங்கிய உறவு வைத்து, அவர்களுக்கு நண்பனாக இருக்கிறார். அவர்களுக்கு மறை பொருட்களை வெளிப்படுத்துவார். அகில உலகத்தையும் படைத்த தேவனோடுகூட உறவாடுவது எவ்வளவு பெரிய பாக்கியம், என்றும் மாறாத தேவனோடுகூட உள்ள உறவில் இன்னும் நாம் வளர்வோம்.

ஆபிரகாம் கர்த்தரை நேசித்ததால் தன் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, தன் சந்ததிகளுக்கும், கர்த்தரைக் குறித்து அறிவித்து அவரைப் பின்பற்றி வாழும்படி போதித்தான். ஆபிரகாமின் சந்ததியின் மூலமாக உலகத்தை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து பிறந்தார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடுகூட தனிப்பட்ட உறவு வைத்துக் கொள்ள முடியும். அதனால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக மாறுவோம்.

கர்த்தர் நம்மிடமோ அல்லது தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகவோ பேசும்போது, ஆபிரகாமைப்போல கீழ்ப்படிகிறோமா? கர்த்தரை



முழுமையாக விசுவாசிக்கிறோமா? கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை நம்மைவிட்டு அகற்றும்படி கர்த்தர் கூறும்போது, நாம் விட்டுவிட தயாராக இருக்கிறோமா? அல்லது நாம் என் சுயவிருப்பப்படிதான் செய்வேன் என்று சொல்லுகிறோமா? ஆபிரகாம் கர்த்தர் சொன்னபடியே தன் நாட்டையும், ஜனங்களையும், தகப்பனுடைய குடும்பத்தையும் விட்டு வெளியேறினான். கர்த்தர் காட்டும் தேசத்திற்கு போனான். நாம், சுயத்தை விட்டு, கர்த்தரை நேசித்தால்தான் கர்த்தருக்கு கீழ்ப்படிய முடியும். உலகத்தையும், உலக ஜனங்களையும் நேசிக்காமல், கர்த்தரை நேசிப்போம். கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து, கர்த்தருக்கு பிரியமானதைச் செய்து, அவருடைய வழியில் செல்வோம். அப்பொழுது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறுவோம்.

கர்த்தர் ஆபிரகாமிடம், பூமியின் தூளைப்போல உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னார். அப்பொழுது அவனுக்கு பிள்ளையில்லாதிருந்தது. ஆபிரகாமும், சாராளும் வயதானவர்களாயிருந்தார்கள். நம்புவதற்கு ஏதுவில்லாதிருந்தும், ஆபிரகாம் கர்த்தரால் தனக்கு பிள்ளையை கொடுக்க முடியும் என்று விசுவாசித்தான். நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவாய் என்று கர்த்தர் கூறினார். அவனது 100வது வயதில் அவனுக்கு பிள்ளை பிறந்தது.

ஆபிரகாம் கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருந்ததால் ஒரு நண்பனைப்போல தேவனோடுகூட உறவாடினான். ஆபிரகாமின் உறவினரான லோத்து சோதோமில் குடியிருந்தான். சோதோமின் ஜனங்கள் மகா பாவிகளாய் இருந்தார்கள். அதனால் கர்த்தர் அதை அழிக்க சித்தங்கொண்டார். லோத்து நீதிமானாய் இருந்ததால், லோத்துவுக்காக ஆபிரகாம், கர்த்தரிடம் பரிந்து பேசினான். துன்மார்க்கரோடே நீதிமானையும் அழிப்பீரோ? என்றும் பாவத்தில் வாழும் ஜனங்களுக்காகவும் தேவனிடம் பேசினான். ஆபிரகாமினிமித்தம், லோத்துவையும் அவன் குடும்பத்தையும் கர்த்தர் காப்பாற்றினார். நாம்



பாவத்தில் வாழும் ஜனங்களுக்காக நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக, பாரத்தோடு ஜெபிக்கிறோமா?

கர்த்தர் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்க விரும்பினார். ஒரே மகனான ஈசாக்கை தகனபலியாக கொடுக்கச் சொன்னார். உடனே ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தேவன் தனக்குக் குறித்திருந்த இடத்திற்கு சென்றான். ஈசாக்கை கட்டி பலிபீடத்தில் அவனை கிடத்தி வெட்டுவதற்கு கத்தியை எடுத்தான். கர்த்தருடைய தூதன் ஆபிரகாமை அழைத்து, உன் மகன்மேல் கையைப் போடாதே என்றார். ஆபிரகாம் தன் ஒரே மகனையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க தயாராக இருந்தான். ஆபிரகாம் கர்த்தரை அதிகமாக நேசித்தான். கர்த்தருக்கு பயந்து அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தான்.

**மோசே**

மோசே கர்த்தரோடு ஒரு நண்பனைப்போல முகமுகமாய் பேசினான். கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்தான். ஒருவன் தன் சிநேகிதனோடே



பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத்திராகமம் 33:11). மோசே தாழ்மையுள்ளவனாக, உண்மையுள்ளவனாக,. சாந்த குணமுள்ளவனாக இருந்தான். ஜனங்கள் தேவனுக்கு எதிராக முறுமுறுத்தபோது, அவர்களுக்காக தேவனிடம் பரிந்து பேசி, ஜெபிக்கிறவனாக இருந்தான். மோசேயின் சகோதரனான ஆரோன் பிரதான ஆசாரியனாகவும், சகோதரி மிரியாம் தீர்க்கதரிசினியாகவும் இருந்தார்கள்.

அவர்கள் மோசேக்கு எதிராக பேசியபோது, கர்த்தர் மோசேயைக் குறித்து இப்படியாகச் சொன்னார்; நான் அவனுடன் மறை பொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான் (எண்ணாகமம் 12:8). நாமும் மோசேயைப்போல தேவனோடுகூட நெருங்கி வாழவும், அவரோடுகூட பேசவும் தேவன் விரும்புகிறார். மோசேயைப் போல ஜெபிக்கிறவர்களாக மாறுவோம். கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும் (உபாகமம் 34:12).

ஏனோக்கைப்போல நோவாவைப்போல தேவனோடுகூட சஞ்சரிப்போம். ஆபிரகாமைப்போல மோசேயைப்போல நண்பனைப்போல தேவனோடுகூட உறவாடுவோம்.


*உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?*

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY

ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744



எங்களது முகவரி : எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






# சமாதானத்தின் தேவன்

*– பால்ராஜ் கென்னடி*

கர்த்தர், நமக்கு தரும் ஆசீர்வாதங்களிலேயே மேலானது சமாதானம். எப்பேர்ப்பட்ட படிப்பு, பதவி, அதிகாரம், வசதிகள் இருந்தாலும், சமாதானம் இல்லையென்றால், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. வெள்ளி, பொன், முத்துக்கள் இருந்தாலும், சமாதானம் இல்லையென்றால் பிரயோஜனமில்லை. எந்தத் துறையில் இருக்கும் மனிதனாக இருந்தாலும், சமாதானம் தேவை. ஏழை முதல் பணக்காரன்வரை சமாதானம் அவசியம். பணத்திற்கு அப்பாற்பட்டது சமாதானம்.

விஞ்ஞானத்தினால், மருத்துவத்தினால் சமாதானத்தை உருவாக்க முடியாது. எந்த மனிதனாலும் சமாதானத்தை உருவாக்க முடியாது. மனிதனுக்கு அப்பாற்பட்டது சமாதானம். அது கர்த்தரிடத்திலிருந்துதான் வரமுடியும். வேறு எங்கிருந்தும், எதிலிருந்தும், எதை செய்தும் சமாதானத்தைப் பெற முடியாது.

கர்த்தர் தம்மை, சமாதானத்தின் தேவன் என்று அறிமுகப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 14:32, எபிரெயர் 13:20, பிலிப்பியர் 4:9, 1 தெசலோனிக்கேயர் 5:23, ரோமர் 15:33, 16:20). ஏசாயா 9:6-ல் தம்மை சமாதானப் பிரபு என்று சொல்லுகிறார். 2 தெசலோனிக்கேயர் 3:16-ல் சமாதானத்தின் கர்த்தர் என்று சொல்லுகிறார். எபிரெயர் 7:2-ல் சமாதானத்தின் ராஜா என்கிறார். மீகா 5:5, எபேசியர் 2:14-ல் சமாதான காரணர் என்கிறார்.நியாயாதிபதிகள் 6:24ல் யெகோவா ஷாலோம் (கர்த்தர் சமாதானம்) என்று தம்மைப்பற்றி சொல்லுகிறார். சமாதானத்திற்கு தாம் அதிகாரி, சமாதானத்திற்கு தாம் ராஜா, சமாதானத்திற்கு தாம் ஆண்டவர், சமாதானத்திற்கு தாமே காரணம், தாமே சமாதானம் என்று கர்த்தர் நம்மைப் பார்த்து சொல்கிறார்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:28). வாழ்க்கையிலுள்ள போராட்டம், நெருக்கடி, இழப்பு, சோர்வு, ஏமாற்றம், வருத்தம் இவற்றினால் இருதயத்தில் மற்றும் மனதில் பாரமாய் இருப்பவர்களைப் பார்த்து கர்த்தர் சொல்லும் வார்த்தை இது. அவர்

நம்முடைய பாரங்களுக்குப் பதிலாக நமக்கு இளைப்பாறுதலை (சமாதானத்தை) தருவேன் என்கிறார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் (1 பேதுரு 5:7). இங்கே அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடுவது என்னவென்றால், நம்முடைய வாழ்க்கையைப்பற்றி, நம்முடைய சுகத்தைப்பற்றி, சூழ்நிலையைப் பற்றி விசாரிக்கிறவர் நம்முடைய பரம தகப்பனே. அதனால் நம்முடைய கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடச் சொல்லுகிறார். கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங்கீதம் 55:22) என்று தாவீது சொல்லுகிறார். நம்முடைய பாரங்களை மற்ற எந்த மனிதனும் சுமக்கமாட்டான். கர்த்தர் மாத்திரமே சுமப்பார்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2). ஆத்துமா என்று இங்கு குறிப்பிடுவது, உள்ளார்ந்த மனிதனையே. நம்முடைய உள்ளார்ந்த மனிதனுக்குள் நாம் சமாதானமாய் இருந்தால்தான் நாம் சுகமாய் இருக்க முடியும். மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும்; முறிந்த ஆவியாரால் தாங்கக்கூடும்? (நீதிமொழிகள் 18:14). நம்முடைய சரீரத்திலுள்ள நோயை, வியாதியை நம்மால் தாங்கிக் கொள்ள முடியும். இந்த வியாதி என்னைவிட்டு நீங்கிவிடும். இந்த நோய் என்னைவிட்டு நீங்கும்வரை அந்த வேதனையை நான் பொறுத்துக் கொள்ள முடியும் என்று நம்மை நாமே தேற்றிக் கொள்ள முடியும். ஆனால், நமக்குள் சமாதானத்தை இழந்து போனால், நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது.

நமக்குள் சமாதானம் இரண்டு நிலைகளில் உள்ளது. மனது, இருதயம் இந்த இரண்டிலும் சமாதானம் உள்ளது. ஒரு ரயிலையோ, பஸ்ஸையோ, விமானத்தையோ பிடிக்க தாமதமாய் போகும்போது அல்லது போக்குவரத்தோ அல்லது மற்ற சூழ்நிலையோ நம்மை தாமதப்படுத்தும்போது, நமக்குள் ஒரு இறுக்கம் ஏற்படும். இதினால் நாம் சமாதானமாய் இருக்க முடியாது. இது மனதில் ஏற்படும் காரியம். அந்த குறிப்பிட்ட ரயிலை, பஸ்ஸை, விமானத்தை பிடித்தவுடன் மீண்டும் நாம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்வோம். இது தற்காலிகமானது.

நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம்போல் இருக்கும் (நீதிமொழிகள் 13:12). திருமணத்திற்காகவோ, வேலைக்காகவோ, வேறு ஏதேனும் காரியம் நடந்தேறுவதற்காக நாம் காத்திருக்கும்போது, அந்த காத்திருக்கும் காலம் நீடிக்கும்போது, நமக்கு ஒரு சோர்வு ஏற்படும். இது முதலில் மனதில் உண்டாகும். காலம் நீடிக்க, நீடிக்க நம் இருதயத்தில் சோர்வு உண்டாகும். இந்த அனுபவம் எப்படி இருக்குமென்றால், நெடுந் தூரம் ஓடினால் எப்படி சரீரத்தில் இளைப்பு உண்டாகுமோ, அப்படி நம் இருதயம் இளைத்துப் போகும். நம்முடைய இருதயத்தில் நாம் சமாதானத்தை இழந்து போவதாகும்.

மனநல மருத்துவர்கள், தத்துவ ஞானிகள் இவர்களெல்லாம், நம்முடைய மனதில் சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிப்பார்கள். அவர்களால் நம்முடைய இருதயத்தில் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. அதை கர்த்தர் மாத்திரமே செய்ய முடியும். ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் (ஏசாயா 66:13). நாம், சமாதானத்தை இழந்துபோகும் போது, கர்த்தர் செய்யும் முதல் காரியம், நம்மை நம்முடைய தாய் தேற்றுவதுபோல தேற்றுகிறார். தம்மை தேற்றரவாளன் (யோவான் 14:16, 15:26, 16:7) என்று சொல்லுகிறார். தம்முடைய வேதத்தின் வார்த்தை மூலமே நம்மைத் தேற்றுகிறார். நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும். அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது (சங்கீதம் 119:49,50). தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும்.. (ரோமர் 15:4). ஆம், கர்த்தருடைய வார்த்தை மாத்திரமே நம்மை ஆற்றித் தேற்றுகிறது. நாம் இழந்துபோன சமாதானத்தைப் பெற்றுத் தருகிறது.

கர்த்தருடைய வார்த்தையை நாம் இரவும், பகலும் தியானிக்கும்போது கர்த்தரைப்பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வோம். அவரைப்பற்றி நாம் எவ்வளவு தெரிந்து கொள்வோமோ அவ்வளவாய் சமாதானத்தைப் பெற்றுக் கொள்வோம்.

இரட்சிப்பின் மேன்மையே சமாதானம்தான். நாம் பாவியாய் இருக்கையில் நமது மனசாட்சி நம்மை குற்றப்படுத்திக்கொண்டே இருக்கிறது. அதனால் நாம் சமாதானமாய் இருக்க முடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம், நாம் பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்பு கேட்கும்போது, கல்வாரி சிலுவையில் அவர் சிந்தின விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்முடைய பாவங்களைக் கழுவி சுத்திகரிக்கிறார். நமது மனசாட்சியைக் கழுவி சுத்திகரிக்கிறார். நமக்கு சுத்த மனசாட்சியைத் தருகிறார். நாம் சமாதானத்தைப் பெறுகிறோம். இதுவே மெய்யான சமாதானமாகும். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

# சமாதானம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை நான் வாழ்த்துகிறேன்.

கடந்த நாட்களெல்லாம் கர்த்தர் நமக்கு சுகம் தந்து, பாதுகாத்து, நமக்காக எல்லாவற்றையும் நடத்திக் கொடுத்திருக்கிறார். அதற்காக முதலாவது நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். எதுவும் தானாக நடப்பதில்லை. எதையும் எந்த மனுஷனும் நடத்துவதில்லை. எல்லாவற்றையும் நடப்பிப்பது கர்த்தரே. ஆமென்!

இந்த புதிய ஆண்டிற்காகக் கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம்.

அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்.

நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான், நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான்.. (ரோமர் 14:5,6).

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல சிலருக்கு எல்லா நாட்களுமே கர்த்தர் தந்த விசேஷித்த நாட்களே. மற்ற சிலருக்கு சில நாட்கள் கர்த்தர் தந்த விசேஷித்த நாட்களாக உள்ளது. இது அவரவரைப் பொறுத்தது என்று பவுல் குறிப்பிடுகிறார். இந்த இரு சாராருமே கர்த்தரை மையமாக வைத்துள்ளார்கள். அதுதான் முக்கியம். அதினால் ஒருவர், மற்றொருவரை இந்த காரியத்தில் குறை சொல்லுவது தவறு. அதைத் தவிர்த்து விடுங்கள்.

இந்த வருடம், ‘‘சமாதானத்தின் ஆண்டு’’ என்று கர்த்தர் குறிப்பிடுகிறார். குடும்ப சூழ்நிலை மற்றும் நமது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலை எப்படியிருந்தாலும், அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சமாதானமாக இருக்கும். இது நான் சொல்லும் காரியமல்ல. கர்த்தர் சொல்லும் காரியம். அவருக்கே மகிமை உண்டாகட்டும்.

தனிப்பட்ட விதத்திலே, எங்களுக்கு ஊழியத்திலே இது முக்கியமான ஆண்டாகும். 2013ல் வல்லமை பயிற்சி முகாமை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இதுவரை மூன்று முகாம்களை கர்த்தர் சிறப்பாய் நடத்தித் தந்தார். இந்த 2014ல் அதன் கிளைகள் விரிந்து படருமென்று சொல்லியிருக்கிறார். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்!

கிறிஸ்துவின் பணியில்,

- பால்ராஜ் கென்னடி